செ.வெ.எண். 23/ஆகஸ்ட் தேதி : 11.08.2016

# உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வுக் கருத்தரங்கம் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வுக் கருத்தரங்கம் தருமபுரி ரோட்டரி ஹாலில் இன்று (11.08.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவினை குத்துவிளக்கேற்றி உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வுப் பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், பரிசுகளை வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது :-

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11-ம் தேதியை உலக மக்கள் தொகை தினமாக அனுசரிக்கப்படுகிறது. அதனையொட்டி வேகமாக அதிகரித்து வரும் மக்கள் தொகை விளைவுகளையும் அதை கட்டுப்படுத்தும் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தருமபுரியில் உலக மக்கள் தொகை விழிப்புணர்வுக் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெறுகிறது. ஆண்டுதோறும் உலகில் 8 கோடி மக்கள் தொகை அதிகரிக்கிறது. உலகின் மக்கள் தொகையில் 6-ல் ஒருவர் இந்தியர். இந்தியாவில் ஆண்டுதோறும் 1.8 கோடி மக்கள் தொகை அதிகரிக்கிறது.

தமிழ்நாட்டில் ஓர் ஆண்டில் பிறக்கும் 10.67 இலட்சம் குழந்தைகளில் 1.11 இலட்சம் குழந்தைகள் 3 இல்லது அதற்கு மேல் பிறப்பு வரிசை கொண்டதாக உள்ளன. இத்தகைய வேண்டாத குழந்தைகள் பிறப்பதை தவிர்த்தால் மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். திட்டமிட்டு விரும்பி பெற்ற குழந்தைதான் மதிப்புமிகு குழந்தையாக வளரும். மக்கள் தொகை பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக அமைவது இளம் வயதில் பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பது, ஆண் குழந்தை வேண்டுமென்ற மனப்போக்கு, போதிய கல்வியறிவின்மை, பெண்ணிற்கு 18 வயது முடியும் முன்பும் ஆணுக்கு 21 முடியும் முன்பும் திருமணம் செய்வது சட்டப்படி குற்றம். 21 வயதிற்கு பின்னரே பெண்ணிற்கு திருமணம் செய்வது ஏற்புடையது. பெண்களுக்கான தற்காலிக கருத்தடை முறையான கருத்தடை அனைத்தும் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாக பொருத்தப்படுகிறது. மேற்கண்ட அனைத்து சேவைகளும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாக கிடைக்கும். நாடு வளம் பெறவும், குடும்பத்தில் வறுமையின்றி வாழவும், தம்பதியர் சுயமாக சிந்தித்து சிறு குடும்ப நெறி ஏற்பது அவசியமாகும். நிரந்தர குடும்ப நல முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது நம் அனைவரின் கடமையாகும். பெண் கல்வியை ஊக்குவிப்போம், பெருகும் மக்கள் தொகை தடுப்போம், பொறுப்புகளை நிறைவேற்ற திட்டமிடுங்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.தொ.மு. நாகராஜன், தருமபுரி நகரமன்ற தலைவர் திருமதி. ஜெ. சுமதி, துணை இயக்குநர் (மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம்) மரு. சி. முல்லைசாரதி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திரு. மு. கல்யாணசுந்தரம்), துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜெகதீசகுமார், துணை இயக்குநர் (காசநோய்) மரு. நெடுமாறன், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு. புவனேஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. எஸ். ரேவதி, மாவட்ட விரிவாக்க கல்வியாளர் திரு. மேகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.